NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu*, p5
**Date:** 18 February 2022

## செய்திக்கொத்து

# ‘பணவீக்கமும் வட்டி உயர்வும் பாதக அம்சமாக இருக்கும்’

அதிகரிக்கும் பணவீக்கமும் வட்டி விகிதமும் சிங்கப்பூரில் நிலச்சொத்துச் சந்தையில் அடுத்த ஆறு மாத காலத்தில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் அம்சங்களில் முதல் இடத்தில் இருப்பதாக நிலச்சொத்துச் சந்தை நிறுவனங்களைச் சேர்ந்த 10 மூத்த நிர்வாகிகளில் ஒன்பது பேர் கருதுகிறார்கள்.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் நிலச்சொத்துப் பிரிவு (NUS+RE) நடத்திய காலாண்டு ஆய்வு மூலம் இது தெரியவருகிறது.

நிலச்சொத்துச் சந்தையில் பாதக விளைவை ஏற்படுத்தக்கூடிய அம்சங்களில் கட்டுமானச் செலவு அதிகரிப்பதே முதல் காரணம் என்று 2021 முதல் மூன்று காலாண்டு ஆய்வுகளில் தெரியவந்தது.

ஆனால், இப்போது பணவீக்கமும் வட்டி உயர்வும் முதல் இடத்தில் இருக்கின்றன. அடுத்த ஆறு மாத காலத்தில் விற்பனைக்குக் கொடுக்கப்படும் புதிய வீடுகளின் விலை மிதமான அளவுக்கு அல்லது கணிசமான அளவுக்கு அதிகமாக இருக்கும் என்று நிலச்சொத்து நிர்வாகிகளில் 10 பேரில் ஆறு பேர் எதிர்பார்க்கிறார்கள்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.